


**16. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று சென்னை வந்தடைந்தார்.

2. முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பேயின் 8-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

3. UGC Net தேர்விற்கான தற்காலிக விடைக் குறிப்புகளை தேசிய தேர்வுகள் முகமை வெளியிட்டுள்ளது.

4. தமிழகத்தில், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகள் நாளை தொடங்குகிறது.

5. பதினெட்டு வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

சி. பி. ராதா கிருஷ்ணன்

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று சென்னை வந்தடைந்தார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன்,

மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் உள்ளிட்டோர் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

சென்னை, செங்கல்பட்டு, திருவாரூர், தஞ்சையில் நடைபெறும் கல்வி, இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளில் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்கிறார்.

செங்கல்பட்டில் உள்ள S.R.M. அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் 22-வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு மாணாக்கருக்கு பட்டங்களை வழங்குகிறார்.

நாளை திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன்,

தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் ரூபி மற்றும் வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வாஜ்பேய்

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல்பிஹாரி வாஜ்பேயின் 8-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

புதுதில்லியில் உள்ள அன்னாரது நினைவிடமான சதைவ் அடலில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லா உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நாளையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் தேச சேவையில் தம்வாழ்நாளை அர்ப்பணித்த தொலைநோக்கு பார்வைகொண்ட சிறந்த அரசியல் ஆளுமை திறன் கொண்டவர் அடல்பிஹாரி வாஜ்பேய் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில் வாஜ்பேயின் உன்னதமான ஆளுமையும், தலைமைத்துவமும், தேசத்தை கட்டமைக்கும் பணியில் ஒவ்வொரு குடிமகனுக்கும் உத்வேகத்தை அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசத்தின் நலனை தமது லட்சியமாக கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்தவர் வாஜ்பேயி என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் குறிப்பிட்டுள்ளார்.

தேச வளர்ச்சி, பாதுகாப்பு உள்ளிட்டவைகளுக்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்புகளை தாம் என்றென்றும் நினைவுகூரந்து தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரிக்ஸ்

12-வது பிரிக்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தலைமையில் புதுதில்லியில் நாளைமறுநாள் தொடங்குகிறது.

2 நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில், புதுமை கண்டுபிடிப்பு, ஒத்துழைப்பு, காடுவளர்ப்பு, காட்டுத் தீ மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

முன்னதாக பருவநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி தொடர்பான சுற்றுச்சூழல் பணிக்குழு, தொடர்பு குழு கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இதனிடையே மீள்திறன் மிக்க எதிர்காலத்திற்கான புத்தாக்கம், ஒத்துழைப்பு, மாற்றம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் தொடர்பான கூட்டம் புனேயில் நாளை தொடங்குகிறது.

வரும் 21-ம் தேதி நடைபெறும் நிறைவுநாள் நிகழ்ச்சியில் உறுப்பு நாடுகளின் தகவல் தொடர்பு அமைச்சர்கள் கூட்டம் மத்திய அமைச்சர்
திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரேசில், ரஷ்யா, சீனா, இந்தோனேஷியா, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் இணைய பாதுகாப்பு, மின்னணு தொழில்நுட்ப சூழல் குறித்து விவாதிக்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

அம்ரித் தோட்டம்

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் தோட்டத்தை பொதுமக்கள் இன்றுமுதல் அடுத்த மாதம் 15-ம் தேதிவரை பார்வையிட அனுமதிக்கப்பட உள்ளனர்.

காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை அங்குள்ள ப்ளு மோரியா தோட்டம், ஆலமரை சோலை, போன்சாய் தோட்டம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை பார்வையிடலாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

UGC Net

UGC Net தேர்விற்கான தற்காலிக விடைக் குறிப்புகளை தேசிய தேர்வுகள் முகமை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற இத்தேர்வு எழுதிய தேர்வர்கள் அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக விடைக்குறிப்புகள் மீது இம்மாதம் 18-ம் தேதிவரை தங்களது ஆட்சேபனைகளை தெரிவிக்கலாம்.

ஆட்சேபனைகளை தெரிவிக்கும் கேள்வி ஒன்றுக்கு 200 ரூபாய் கட்டணம் வசூலிக்கும் என்றும் முகமை கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

VB G RAM G

தமிழகத்தில், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் 10 ஆயிரத்து 185 கால்வாய்கள், 809 ஏரிகள், குளங்கள், ஊரணிகளை சீரமைக்கும் பணிகள் நாளை தொடங்க உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னை நீங்கலாக 37 மாவட்டங்களுக்கு 507 கோடியே 92 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக தூர்வாரும் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழக சட்டப்பேரவை

சுதந்திர தின கொண்டாட்டங்கள் முடிவடைந்த நிலையில் தமிழக சட்டப்பேரவை நாளை மீண்டும் கூடுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைகளின் மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சென்னையில் சுதந்திர தின அணிவகுப்பின் போது உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 30 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று உத்தரவிட்டுள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தொ ிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று சென்னையில் சுதந்திர தின அணிவகுப்பின் போது மயக்கமடைந்த காவலர் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பார்த்தீனியம்

நாடுமுழுவதும் பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் இன்று தொடங்கியது.

வரும் 22-ம் தேதிவரை நடைபெறும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் விவசாயப் பயிர் மகசூல் பாதிப்பு, தோல் அரிப்பு, ஒவ்வாமை, சுவாச கோளாறு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் இந்த களைச்செடிகள் பூக்கும் முன்பே வேரோடு களைய விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் முன்வர வேண்டுமென்று திருச்சி சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இச்செடிகளை அகற்றும் போது கையுறை, முகக்கவசம், காலணியை கண்டிப்பாக அணிய வேண்டும் என்றும்

பாதுகாப்பான முறையில் இதனை நீக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வாடிக்கையாளர்களுக்கான eKyc சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 23-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இன்றுடன் கால அவகாசம் முடிவடைய இருந்த நிலையில் வாடிக்கையாளர்களின் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை.

பயனாளர்கள் இணையதளம் வாயிலாகவோ அல்லது நேரிலோ இதனை சமர்ப்பிக்கலாம்.

தமிழகம் முழுவதும் விடுபட்டோருக்கான குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாம் நாளை நடைபெறுகிறது.

1 முதல் 19 வயது வரையிலான குழந்தைகள், வளர்இளம் பருவத்தினர், பெண்கள் உள்ளிட்டோர் குடற்புழு நீக்க மாத்திரைகளை இம்முகாமில் பெற்றுக்கொள்ளலாம்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டம், பயிர்கடன் தங்களது நிலங்களுக்கு தேவையான உரங்களை பெறுவதற்கு விவசாய அடையாள அட்டை எண் கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. மிருணாளினி தொிவித்துள்ளார்.

வேளாண் பெருமக்கள் இதனை பெற அருகில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு நிலம் சம்மந்தமான ஆவணங்களை சமர்ப்பித்து பயனடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் வேளாண் பெருமக்கள் தங்கள் குறைகளை மனுக்களாக அளித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. ரவிக்குமார் தொிவித்துள்ளார்.

தூத்துக்குடி வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் அங்கு செயல்பட்டு வந்த இருசக்கர வாகன விற்பனை நிலையத்தில் வாகனங்கள் தீக்கிரையாயின.

இவ்விபத்து குறித்து சிப்காட் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தென்காசி

ஓணம் பண்டிகை வரும் 26-ம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில் தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் மலர்ச்சந்தையில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. மல்லிகைப்பபூ கிலோ 700 ரூபாய்க்கும், பிச்சிப்பூ 600 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நெல்லை

நெல்லை பாபநாசம் அகஸ்தியர் அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு நாளைமுதல் அனுமதிக்கப் பட்டுவார்கள் என வனத்துறை தொ◌ிவித்துள்ளது.

ஆடி அமாவாசையை ஒட்டி விதிக்கப்பட்ட 10 நாட்கள் தடை இன்றுடன் நிறைவடைவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கூடைப்பந்து

அஹமதாபாத்தில் 18 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் Group - D பிரிவில் இந்தியா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

அமெரிக்கா ப்ரவுன்ஸ் பர்கில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் கலியாண்டபூனாச்சா, ஈக்வெடாரின் கான்செலோ இணை முன்னேறியுள்ளது.